பொது சன நூலகம்
16 MAR 1999

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி01 திங்கட்கிழமை (15-03-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்92

## காணாமற்போனோர் தொடர்பான விசாரணை இன்று யாழ். செயலகத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 15
காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு யாழ். செயலகத்தில் இன்று விசாரணைகளை ஆரம்பிக்கவிருக்கின்றது.

இந்த ஆணைக்குழு முன் பாக நேற்றுப் பல சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ். நிலைமை குறித்து விளக்கமளித்தனர்.

குடாநாட்டில் பொதுமக்கள் காணாமற்போகும் சம்பவங்கள் இடம்பெற்ற காலத்தில் நிலவிய சூழ்நிலை, காணாமற்போனோரின் குடும்பங்களின் நிலைமை ஆகியன தொடர்பாக இவர்கள் விளக்கிக் கூறினர்.

ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தவர்கள் இன்று முதல் சாட்சியம் அளிப்பர்.

இந்தக் குழுவின் விசாரணையை ஒட்டி செயலகப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

(இ-3-6-15)

## 1996க்கு முன் இடம்பெற்ற சம்பவங்களே விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 15
''குடாநாட்டில் 96 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்க எமது ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை.

யாழ். வந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவினர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டனர்.

1996ஆம் ஆண்டுக்குப் பின் காணாமற் போனவர்களின் உறவினர்கள் சிலர் நேற்று ஆணைக்குழுவுக்கு சாட்சியம் அளிக்கச் சென்றனர்.

1988 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 1995 ஆம் ஆண்டு செப்ரம்பர் வரையான காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பாகவே விசாரிக்க தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும்--

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 102 பேரின் தண்டனை நிறைவேற்றப்படுமா?

### நீதி அமைச்சு ஆராயும்

கொழும்பு, மார்ச் 15
மரணதண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு மரணதண்டனை வழங்குவதா என்பது குறித்து ஆராய நீதி அமைச்சு இந்தவாரம் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றது.

பல்வேறு குற்றச் செயல்களில் குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட நூற்றிரண்டு பேர் சிறைச்சாலைகளில் உள்ளனர் என்றும்—

அவர்களுக்கு அந்தத்தண்டனையை நிறைவேற்றுவதா? இல்லையா? என்று முடிவு எடுக்கமுடியாத நிலையில் நீதி அமைச்சு அதிகாரிகள் உள்ளனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — மரணதண்டனை வழங்கும் நடைமுறை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அறிவித்துள்ளார். (இ—3)

## சிறு சிறு குழுக்களாக நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 15
'போர்க்கோஷம்' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் சிறு சிறு குழுக்களாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

ஒட்டுசுட்டான் பகுதியில்
(10 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காடு சம்பவம் குறித்து அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 15
கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் வீடு ஒன்றில் மறைந்திருந்த ஏழு விடுதலைப் புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை படை-
(10 ஆம் பக்கம் பார்க்க)

# பெரும் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராகின்றனர்!

## இராணுவ உளவுப் பிரிவு தகவல்

கொழும்பு, மார்ச் 15
'போர்க் கோஷம்' இராணுவ நடவடிக்கைப் படைகள் மீது மன்னாரின் மேற்குப் பகுதியால் வந்து பெரும் தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டமிட்டிருப்பதாக இராணுவ உளவுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

போர்க்கோஷம் இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் முதலில் கண்டி நெடுஞ்சாலையின் மேற்கு தெற்குப் பகுதிகளைத் தாக்கி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மல்லாவி வரை முன்னேறவே திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன் கடற்படைத் தளபதி, தரைப்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி ஆகியோர் சகிதம் வவுனியா வந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர அதிகாரி இன்று விடுதலை ஆவார்!

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ். மாநகரசபைக்குண்டு வெடிப்புத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். மாநகரசபைப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி இராஜா இரட்ணசிங்கம் கொழும்புக் கோட்டை நீதிவான் மேர்வின் விஜயதுங்க முன் இன்று ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளார்.

சட்டமா அதிபரின் சிபார்சின் பேரில் இரகசியப் பொலீஸ் பொறுப்பதிகாரி சுமித் சில்வா இவரின் விடுதலை தொடர்பான மனு ஒன்றை கோட்டை நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாத ஆயுதக் குழுவால் லக்பிம செய்தியாளர் கடத்தப்பட்டார்!

### கை, கால் கட்டப்பட்ட நிலையில் மீட்பு

கொழும்பு, மார்ச் 15
'லக்பிம' சிங்கள வாரஇதழின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் சிறிலால் பிரியந்த நேற்று அதிகாலை 3. 45 மணியளவில் கங்கொடவிலவில் உள்ள அவரது வீட்டில் இருந்து இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டார்.

கை கால்கள் கட்டப்பட்டு, மயக்க நிலையில் தெகிவளை அன்டர்சன் வீதியில் மீட்கப்பட்ட அவர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருவாகனங்களிலும், இரு மோட்டார் சைக்கிள்களிலும் வந்த ஆயுதக் கும்பல் அவரது வீட்டுக்குள் புகுந்து அவரைத் தாக்கிக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர் கடத்தப்பட்டதாகச் செய்திவெளியானதும் தகவல் துறைப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க அவரது வீட்டுக்குச் சென்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விவரங்களை அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலித்தீன்பை ஒன்றில் என்னை போட்டு கட்டினர்

### வழியில் வீசப்பட்டேன்

கொழும்பு, மார்ச் 15
வீட்டில் இருந்த என்னைத் தாக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்ற ஆயுதக் கோஷ்டியினர் வழியில் ஒரு பெரிய பொலித்தீன் பையில் என்னைப் போட்டுக்கட்டி காடு போன்ற இடத்தில் தூக்கி வீசினர்.

நேற்றுத் தாக்குதலுக்கு உள்ளான 'லக்பிம' பத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கடத்திய வாகனம் திரும்பவும் கையளிப்பு!

### செஞ்சிலுவை ஊடாக

மட்டக்களப்பு, மார்ச் 15
விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட மட்டக்களப்பு கல்விக் கல்லூரி பீடாதிபதியின் வாகனம் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக மீள ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி மட்டக்களப்பு—வாழைச்சேனை வீதியில் வந்தாறு மூலையில் வைத்து இந்த் வாகனம் கடத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிபிலை ஆஸ்பத்திரி வார்ட்டில் குண்டுவெடிப்பு

### நோயாளி பலியானார்

பதுளை மாவட்டம் பிபிலை மாவட்ட வைத்தியசாலை வார்ட் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பெண் நோயாளரொருவர் பலியானார்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நோயாளியின் தலையணைக்குள் இந்தக் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது மேலும் மூன்றுநோயாளர்கள் காயமடைந்தனர். (இ—21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்லத்துரை

வேலடி, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் தேயிலைத்தோட்டப் பிரதம எழுதுவினைஞருமாகிய கந்தையா செல்லத்துரை திருகோணமலையில் 12-03-99 இல் காலமானார்.

அன்னார் கதிரவேலு, சின்னத்துரை (வீரசிங்கம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

(நேற்று (14-03-99) பிரசுரமான மரண அறிவித்தலில் மேற்கண்ட இரு பெயர்களும் சேர்க்கப்படவில்லை)

தகவல்:
ச. குணசிங்கம்

[63869]

## சின்னக்குட்டி வேலுப்பிள்ளை

மாசேரி வரணியைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி வேலுப்பிள்ளை அவர்கள் 13-03-99 அன்று பி. ப. 2-00 மணி அளவில் அகால மரணமானார்.

அன்னார் நாகம்மாவின் (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்) அன்புக் கணவரும், சிவகுமார் (ஜேர்மனி), சிவரஞ்சினி (யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி), சிவதர்சினி (மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (14-03-99) நேற்றைய தினம் பி. ப. 3.00 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத் தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

தகவல்;
ச. இராசரத்தினம்
(மகன்)

கொடிகாமம். (சி/6780)

## திருவருள் பரராஜசிங்கம்

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவருள் பரராஜசிங்கம் (செல்லக்கண்டு) 12 — 03 — 99 அன்று இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவருள் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், புஸ்பாதேவியின் அன்புக் கணவரும், பிரகலாவதி, ரசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், குலசிங்கம் (கொழும்பு), தருமகுலசிங்கம் (மலேசியா), விஜயசிங்கம் (இந்தியா), ஜெயசிங்கம் (இங்கிலாந்து), துரைராசசிங்கம் (தம்பிப்பிள்ளை) (பன்னாலை), திருமதி குமாரசாமி (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில்நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. குமாரசாமி
(மைத்துனர்)

195, பிரதான வீதி,
சுழிபுரம்.

(63866)

## கார்த்திகேசு கிருஷ்ணர்

(முன்னாள் தினகரன் பத்திரிகை முகவர்)

டச்சுவீதி மானிப்பாயைச் சேர்ந்த கார்த்திகேசு கிருஷ்ணர் 14-03-99 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காங்கேசன் (C. T B. சாரதி), சிவபாலன், கமலாதேவி, மகேஸ்வரி, கிருஷ்ணவேணி, தனவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் (டோகா), சிவலிங்கம் (இ. மி. ச, சுன்னாகம்), சிவகுமார் (மஸ்கஸ்), தங்கராசா (கொழும்பு), கா. சாந்தகுமாரி, சி. இந்திராணி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-03-99) நண்பகல் 1-00 மணியளவில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. சிவபாலன்

கோறாந்தோட்டம்,
மானிப்பாய்

(63874)

## கணபதி கிருஸ்ணபிள்ளை

வட்டு. தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதி கிருஸ்ணபிள்ளை அவர்கள் நேற்று (14-03-1999) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணி, கந்தசாமி, நாகேஸ்வரி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற பொன்னையா, துரைராஜா ஆகியோரின் மைத்துனரும் தேவராசா, சித்திரா, கமலா, சந்திரா, மல்லியா, சிவரஞ்சன், வசந்தா ஆகியோரது மாமனாரும் யோகலிங்கம, கணேசலிங்கம், யோகா இந்திரா, அருள்பரா, ஜீதா ஆகியோரது சிறியதந்தையும், சுரேஸ், றஜீத், நரேஸ், ராஜ், சதீஸ், ரோஜன், நிரோ, அஜித், கோபி, சசி, சஜன், சிந்து, விஜி, ரஜிதா, சுஜிதா, விதுர்சன் ஆகியோரது பேரனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (15-03-99) திங்கள் முற்பகல் 10-00 மணிக்கு வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பஞ்சலிங்கம்
(சகோதரர்)

மூளாய் வீதி,
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை,

(63882)

## இடமாற்றம்

வேலணை, மார்ச் 15

மண்டைதீவுப் பகுதியில் கிராமசேவகராகக் கடமையாற்றிய சோ. சுந்தரலிங்கம் புங்குடுதீவு பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (ஐ-167)


## ராஜா

யாழ்ப்பாணம்.

கார்த்திக் - தேவயானி
ரசிகா, அஞ்சு-அரவிந்த்
ஜனகராஜ், மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த

உதவிக்கு வரலாமா

இன்று காட்சிகள்
10-30, 2-30.

(சி/6663)

## நாகம்ஸ்

சுன்னாகம்.

விஜய், விஜயகாந்த்,
யுவராணி, கௌதமி
நடித்த

செந்தூரபாண்டி

புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30

(63856)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

இன்று முதல்
சிவாஜி - பத்மினி
கே. ஆர். விஜயா
நாகேஷ், பாலாஜி
நடித்த

இரு மலர்கள்

காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223

(63680)

எமது புதிய
வீடியோ வெளியீடு!

ஜெகபாபு - சௌந்தர்யா
ரம்பா நடித்த

போக்கிரி காதலன்
(CD பிரதி)

சாந்தன் வீடியோ றெக்கோடிங்

இல. 36/ 02,
இராசாவின்தோட்டம்.

(63881)


## டோகாவில் அராலி இளைஞர் பலி

வலி. தென் மேற்கு, மார்ச் 15

டோகாவில் இடம்பெற்ற கார் விபத்து ஒன்றில் அராலி வாசி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அராலி வடக்கு — செட்டியார்மடம் பகுதியைச் சேர்ந்த சண்முகம் சசிகரன் (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் எட்டு வருடமாக டோகாவில் வேலை செய்து வந்தார் என தெரிவிக்கப்பட்டது. (இ-7-185)

## அஸ்பெஸ்ரோஸ் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு

# முக்கிய அறிவித்தல்

மேற்படி தொழிற்சாலை ஊழியர்களுக்கான (E. P. F.) – (E. T. F.) என்பனவற்றின் பற்றுச்சீட்டுகள் யாழ். சிறாம்பியடியிலுள்ள மணியம் கட்டடத்தில் இயங்கும் தொழில் திணைக்களத்திற்கு வந்துள்ளன. எனவே உதவித் தொழில் ஆணையாளர் திரு. ஆ. பசுபதி அவர்கள் இதுபற்றி தொழிலாளர்களுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 17—03—99 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சகல தொழிலாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார்.

(63880) — தலைவர்

# இதய அஞ்சலி

எமது சக மாணவியான
செல்வி வே. சிவரஞ்சினி
அவர்களின் அன்புத் தந்தை

## சி. வேலுப்பிள்ளை

அவர்களின் அகால மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள்
H. N D. A. 3 ஆம் வருடம் (Eng),
உயர் தொழில்நுட்ப நிறுவனம்.

(63875)

# மரண அறிவித்தல்

திருமதி
## சந்தானலட்சுமி கந்தசாமி
(சரோஜினி)

இல. 39/6, புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி சந்தானலட்சுமி கந்தசாமி காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் திரு. கந்தசாமியின் அன்பு மனைவியும் பத்மநாதனின் (சர்வா) அன்புச் சகோதரியும் சத்தியசீலன் (கண்ணன்) (ஜேர்மனி), விஜி (ஜேர்மனி), உமா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரூபினி (ஜேர்மனி), நவரட்ணம் (ஜேர்மனி), செல்வன் ஆகியோரின் அன்பு மாமியும் யோகத்தின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15-03-99) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காகக் கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
சர்வா
(சகோதரன்)

39/6, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(63877)


# வந்துவிட்டது!

அமெரிக்க - கொரிய தயாரிப்புக்களான

DISH ANTENNA கள்

RADIO CD SETUP கள் - AUDIO CDகள்

| | | |
|---|---|---|
| SONY GRY 8 | ( 2000 w ) | CD PLAYER |
| SONY GRY 7 | ( 1500 w ) | ″ |
| PANASONIC A K 25 | ( 1000 w ) | ″ |
| POINEER 750 A | ( 750 w) | ″ |
| SONY C - 20 | ( 650 w) | ″ |
| PANASONIC A K 5 | ( 550 w) | ″ |
| AIWA AK 5 | ( 90′ w) | ″ |

EUROMIND ACTIVE ANTENNA கள், AUDIO - VIDEO கசற்கள்
SONY ED 1, PANASONIC SR 30, SR 50, SD 220 போன்ற
VIDEO DECK வகைகள்
BAJAJ REGAL CEILING FANS, KOBE பூஸ்ரர் வகைகள் மற்றும் TABLE FAN வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அருண் வீடியோ மூவி பிரதான வீதி, நெல்லியடி

(63876)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பனை பிடிக்க வேவு விமானத்தை பயன்படுத்தக் கோரி நீதிமன்றில் மனு!

பெங்களூர், மார்ச் 15



சந்தனமர கடத்தல் வீரப்பனைப் பிடிக்க ராணுவத்தின் வசம் உள்ள விமானி இல்லாமல் இயங்கும் 'நிஷாந்த்' விமானத்தைப் பயன்படுத்தக் கோரி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தபால்துறை இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியா, இது தொடர்பான பொதுநலன் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

வீரப்பனைப் பிடிக்க கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்களின் சார்பில் சிறப்பு அதிரடிப்படை அமைத்தும் இன்னும் பிடிக்க முடியவில்லை.

வீரப்பனால் இரு மாநில அரசுகளுக்கும் கோடிக்கணக்கான ரூபா செலவும், உயிர் இழப்பும் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அவனை இன்னும் பிடிக்க முடியவில்லை.

எனவே பொதுமக்கள் நலன் கருதி வீரப்பனைப் பிடிக்கப் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மையம் (டி, ஆர். டி. ஓ.) வடிமைத்துள்ள ஆள் இல்லாத விமானத்தைப் பயன்படுத்த வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி இரு மாநில அரசுகளுக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

(ஐ-10)

# அமெரிக்காவுக்குப் பதிலடி; பின் லேடன் ஆயத்தம்?

லண்டன், மார்ச் 15

ஆப்கானிஸ்தானில் தங்களது முகாம்களைத் தாக்கிய அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கப் பாகிஸ்தான் ஆதரவு கூலிப்படைகள் ஆயத்தமாகி வருகின்றன.

பாகிஸ்தான் பத்திரிகையில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் உளவு அமைப்பின் ஆதரவைப்பெற்ற பயங்கரவாத அமைப்புகளான ஹர்கத் அல் அன்ஸார், லஷ்கர் இதைபா இரண்டும் காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவையாகும்.

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியிலுள்ள கோஸ்த் நகரில் ஜில்லி முகாம் மீது கடந்த டிசெம்பர் மாதத்தில் நடந்த அமெரிக்கத் தாக்குதலில் தப்பியவர்களும் சவூதியைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒஸாமா பின் லேடனும் அமெரிக்காவில் தாக்குதல் நடத்துவதற்காகக் கூட்டுப்படையை அமைத்துள்ளதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

'கோழைத்தனமாக எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்காக குறைந்தபட்சம் 100 அமெரிக்கர்களையாவது கொல்வோம்' என்று அன்ஸார் அமைப்பின் தளபதி தெரிவித்ததாக லண்டனிலிருந்து வெளியிடப்படும் 'நியூ இன்டர்நஷனல்' பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

(ஐ-10)

## 45 ஆவது வயதில் 24 ஆவது குழந்தை

### பாக். பெண் சாதனை

முல்ரன், மார்ச் 15

கடும் சனத்தொகைப் பெருக்கத்தால் அவதியுறும் பாகிஸ்தானில் பெண் ஒருவர் கடந்த வாரம் தனது 24 ஆவது குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த மரியம் (வயது 45) என்ற பெண்ணே தனியார் மருத்துவ நிலையம் ஒன்றில் தனது 24 ஆவது ஆண் மகனைப் பிரசவித்தார்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் மணம் முடித்த இந்தப் பெண் 15 ஆண் குழந்தைகளையும் 8 பெண் குழந்தைகளையும் ஏற்கனவே பெற்றுள்ளார். அவர்களில் ஐந்து ஆண் பிள்ளைகளும், 4 பெண் பிள்ளைகளும் இறந்து விட்டனர்.

[ஐ]

## துருக்கியில் குண்டுத் தாக்குதல்

துருக்கியின் தலைநகர் இஸ்தான் புல்லில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பத்து பெண்கள் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சந்தை ஒன்றில் ஏறியப்பட்ட பெற்றோல் குண்டே இந்த அனர்த்தத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது,

இச்சம்பவத்தின் போது இரண்டு பேர் உடல் கருகியும் ஏனைய 13 பேர் மூச்சுத்திணறியும் உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

இதே வேளை இச்சம்பவத்திற்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

## சுயேச்சைகள் மிரட்டல்

# ராப்ரிதேவி அரசுக்கு மீண்டும் நெருக்கடி

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவின் கிழக்கு மாநிலமான பீஹாரில் கடந்த 9 ஆம் திகதி மீண்டும் பதவியேற்றுக் கொண்ட ராப்ரிதேவி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வந்த 6 சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் தமது ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ளதை அடுத்து முதல்வர் ராப்ரிதேவி அரசுக்கு மீண்டும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

உலக அரங்கில்

கடந்த புதனன்று பதவி ஏற்றுக் கொண்ட 78 உறுப்பினர்கள் அமைச்சரவையில் தாம் சேர்த்துக் கொள்ளப்படாததை அடுத்தே சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் இந்த மிரட்டலை விடுத்துள்ளனர்.

தமது ஆதரவைப் பெற்று அரசமைத்த ராப்ரிதேவி ஏனைய விடயங்களில் தமது பஆலோசனைகளை ஏற்றில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பதவி ஏற்ற 10 நாள்களுக்குள் தனது அரசாங்கத்தின் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று பீஹார் ஆளுநர் உத்தரவிட்டதை அடுத்து எதிர்வரும் 17 ஆம் திகதி ராப்ரிதேவி அரசாங்கம் சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்த எண்ணியுள்ளது.

இந்த வேளையில் சுயேச்சைக் குழுக்களிடம் இருந்து வந்துள்ள மிரட்டல் பீஹாரில் மீண்டும் அரசியல் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

324 உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப் பேரவையில் தனக்கு 164 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதாக ராப்ரிதேவி தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

## பீஹார் ஆளுநர் குஜராத்துக்கு மாற்றம்

புதுடில்லி, மார்ச் 15

பீஹார் ஆளுநர் சுந்தர்ஜி பண்டாரி குஜராத்தின் புதிய ஆளுநராக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பட்னா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பிறிஷ் மோகன்லால் பீஹார் ஆளுநர் பொறுப்புக்களை தற்காலிகமாகக் கவனித்துக் கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பீஹாரில் ஜனாதிபதி ஆட்சி ரத்துச் செய்யப்பட்டு ராப்ரிதேவி அரசு அமைக்கப்பட்டதை அடுத்து ஆளுநர் பண்டாரியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

பண்டாரி மாற்றப்பட்டது சரியான நடவடிக்கை எனவும் இம் முடிவு முன்பே எடுக்கப்பட்டிருந்தால் நன்றாக அமைந்திருக்கும் எனவும் காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

(ஐ-க)

## பயணிகளைப் பாதுகாக்க பொலீஸ்பிரிவு

வெளிநாட்டு உல்லாசப் பணிகளைப் பாதுகாப்பதற்கு ஆங்கிலம் பேசத் தெரிந்த பொலீஸ் படை ஒன்றை அமைக்க இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இன்னும் மூன்று மாத காலத்தில் இந்த விசேட பொலீஸ் பிரிவு செயற்படத் தொடங்கும்' முதலில் உல்லாசப்பயணிகளின் யாத்திரைத் தலங்களான அக்ரா மற்றும் வாரணாசிப் பகுதிகளில் இப்பிரிவு செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாநிலத்துக்கு வரும் உல்லாசப் பயணிகளை கொள்ளை மற்றும் தகாத செயல்களில் இருந்து பாதுகாப்பதற்கு ஆங்கிலத்தில் நன்கு பேசும் திறமை கொண்ட பொலீஸார் அவசியம் என வலியுறுத்தப்பட்டதை அடுத்து இப் பிரிவை மாநில அரசு அமைத்துள்ளது.

(ஐ)

## மொனிக்கா சுயசரிதை

# லண்டன் புத்தக கடையில் மக்கள் முண்டியடிப்பு

மொனிக்காவின் கையெழுத்திட்ட புத்தகங்களை வாங்குவதற்காக பெருந் திரளான மக்கள் லண்டனில் உள்ள புத்தகக்கடைகளின் முன்பாக நீண்ட வரிசையில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

வெள்ளை மாளிகையின் முன்னாள் உள்ளகப்பணியாளர் மொனிக்கா லுவின்ஸ்கியின் சுயசரிதையான 'மொனிக்காவின் கதை' என்ற புத்தகத்தை வாங்குவதற்கே மக்கள் முண்டி அடிக்கின்றனர்.

லண்டனில் உள்ள புத்தகக்கடைகளிற்குச் சென்ற மொனிக்கா லுவின்ஸ்சி மேற்படி புத்தகங்களில் சிலவற்றில் தனது கையொப்பத்தினை இட்டுள்ளார்.

மொனிக்காவின் கையெழுத்து இடப்பட்ட புத்தகங்களை வாங்குவதற்கே மக்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-க)

## ஈராக்கில் 20 பேர் தூக்கிலிடப்பட்டனர்

அதிபர் சதாம் ஹுசேனின் ஆலோசகர் உட்பட 20 இற்கும் அதிகமான சிரேஷ்ட அதிகாரிகள் இம் மாத முற்பகுதியில் தூக்கிலிடப்பட்டதாக ஈராக்கிய எதிரணியினர் தெரிவித்துள்ளனர்.

சதாமைப் பதவியில் இருந்து கவிழ்ப்பதற்கு சதி முயற்சியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் தூக்கிலிடப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

வளைகுடாப் போரில் ஈராக்கியப்படைகளுக்குத் தலைமை வகித்த தளபதி ஒருவரும் தூக்கிலிடப்பட்டோரில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-க)

## கிழக்கு சைபீரியாவில்

# 14 பள்ளி மாணவர்கள் கடத்தப்பட்டு விடுதலை

கிழக்கு சைபீரியாவில் 14 பாடசாலை மாணவர்களை 17 வயதான இளைஞர் ஒருவர் துப்பாக்கி முனையில் கடத்தி பிணைக் கைதிகளாக வைத்திருந்து பின்னர் விடுவித்துள்ளார்.

இந்த இளைஞர் தனக்கு பணமும் இஸ்ரேல் செல்வதற்கு ஒரு விமானமும் தரப்பட வேண்டும் எனக் கோரியே மாணவர்களை பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலீஸார் பின்னர் பேச்சு நடத்தியதை அடுத்து அந்த இளைஞர் பொலீஸாரிடம் சரணடைந்தார். மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை —

இந்தக் கடத்தலில் சம்பந்தப்பட்ட இளைஞர் 3. வயதுப் பெண் ஒருவரின் கொலையில் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ-6)


## பனிக்கட்டி ஆலை பணியாளர்கள் தேவை

UNDP நிறுவன உதவியுடன் வடமாகாணம் கடற்றொழிலாளர். கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நிறுவப்படவிருக்கும் பனிக்கட்டி ஆலைக்குப் பெண் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். திடகாத்திரமான உடல் வலிமையும், 20 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், 8 ஆம் வகுப்பு படித்தவராகவும், தொழில் நிலையத்திற்கு அண்மையில் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கவேண்டும்.

தலைவர்,
வட. மா. க, தொ. கூ. ச. சமாசம்
இல. 100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(63872)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி யோ. தமிழினியின்
அன்புத் தந்தையார்

அமரர்

கார்த்திகேசு யோகநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும் இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழையமாணவர்கள்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(சி/6781)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## தவறிவிட்டது

கந்தரோடை சுன்னாகத்தைச் சேர்ந்த சாந்தலிங்கம் மகீவரன் என்பவருடைய தேசிய, விஷேட அடையாள அட்டைகள் (இல.743322797V 0906016406) மற்றும் சென். ஜோன்ஸ்படை அடையாள அட்டை என்பன 13-3-99 அன்று கொக்குவிலுக்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நாதன் பிறதர்ஸ். இணுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (63867)

## விற்பனைக்கு

MD 90 ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சந்திரகாந்தன், 207, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (63858)

25 ஸ்ரீ ரக்ரர் போனற்செற் ஒன்றும், மக்காட் இரண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோ. சிவராசா (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்), 97, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (63853)

மல்லாகம் பஸ்கொம்பனி ஒழுங்கையால் மானிமனை ஒழுங்கையில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் உள்ளடக்கிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: யோண் ஆபிரகம் தர்மரட்ணம், C/O. பாஸ்ரர் விக்ரர் தர்மலிங்கம், இல. 29, ஆசீர்வாதம் லேன், யாழ்ப்பாணம். (63813)

## பணிப்பெண் தேவை

கால் இயலாத பெண்மணி ஒருவரைப் பராமரிப்பதற்கு வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும். தொடர்பு: S சுகிர்தநாயகம், புனித இல்லம், சோதிவேம்படி, மானிப்பாய், (63854)

## மணமகன் தேவை

விஸ்வகுல 41 வயதுடைய ஓர் அளவு படித்த அழகான கிரசபாவ குற்றம் இல்லாத பெண்ணுக்கு விஸ்வகுல மணமகன் தேவை. ஜாதக விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர. இல. 855, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (63848)

## சங்கீதம் 10, 11

புதிய பாடத்திட்டத்தை முழுமையாக உள்ளடக்கி, செயல்முறை, அறிமுறையுடன், மூன்று ஆண்டு காலவினா விடைகளையும் கொண்டு, ஆசிரியை கிருஷ்ணவேணி மயில்வாகனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. வாங்கிப் பயனடையுங்கள். [63793]


# நூல் வெளியீடு

வலிகமம் தெற்கு, மார்ச் 15

இணுவில் சிவகாமியம்கனை வேண்டி புலவர் வை. ம. சிற்றம்பலம் பாடிய இடர்களை திருப்பதிகமும், திருவருக்க மாலையும்' என்னும் நூல் வெளியீட்டு விழா இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். கூட்டுறவுச் சமாசத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும்.

நூலின் அறிமுகவுரையை யாழ் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவனும், ஆய்வுரையை ஆசிரியர் ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர்.

இணுவில் கிழக்கு கிராம அலுவலர் தி புரந்திரதாசன் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

நூலாசிரியர் புலவர் வை. க. சிற்றம்பலம் விழாவில் கௌரவிக்கப்படுவார்.

(ஐ-152)

# கிராம அலுவலர்களுக்கு திறன் விருத்திப் பயிற்சி

மூளாய், மார்ச் 15

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்திப் பயிற்சித் திட்டம் ஒன்றை யாழ். செயலகம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களின் சேவைத்திறனை அதிகரிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தைப் பின்பற்றி இப்பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது. இப்பயிற்சி பிரதேச செயலக ரீதியாகவும் தனித் தனியான குழு நிலையிலும் மிகவும் விரிவான முறையிலும் வழங்கப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கடமை புரியும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ஐ-99)


யாழ்ப்பாணம்

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வரையறுக்கப்பட்டது

நடுவப் பணிமனை கட்டட புனரமைப்பு பொருள்கள் விநியோகத்துக்கான

## கூறு விலைகள் கோரல்

இச்சங்கத்தின் நடுவப் பணிமனைக் கட்டட புனரமைப்பு வேலைகளுக்குத் தேவையான கீழ்க் குறிப்பிட்டுள்ள பொருள்கள் விநியோகத்துக்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1) கிறசர் சல்லிக் கல் வழங்கல்
2) மணல் வழங்கல்
3) கூரை வேலைக்கான பனை வளைகள் வழங்கல்
4) கட்டட சார மரங்கள் வழங்கல்
5) கதவு, யன்னல்கள் செய்து வழங்கல்
6) இரும்புச் சுருக்குக் கேற்றுகள் செய்து வழங்கல்

இவை சம்பந்தமான மேலதிக விவரங்களை சங்கத் தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

கூறு விலைகள் சமர்ப்பிக்க விரும்புவோர், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50 செலுத்தி அதற்கான உரிய பத்திரத்தை தலைமைப் பணிமனையில் பெற்று, 24-03-99 ஆம் திகதியோ அதற்கு முன்போ எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கூறு விலை அனுப்பப்படும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கூறு விலைகள்' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பொது முகாமையாளர்

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
14-03-1999

(சி/6779)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### இராசமணி பொன்னையா

(இளைப்பாறிய ஆசிரியை)

அன்னையின் மடியில் 19-07-1925

ஆண்டவன் அடியில் 13-02-1999

அன்பாலும் பண்பாலும் வளர்த்தெம்மை
கண்போலக் காத்திட்ட அம்மாவே!
அம்மாவாய், அம்மம்மாவாய், அப்பம்மாவாய், மாமியாய்
எம்மோடு என்றுமிருப்பீரே என்று இருந்தோம்;
எங்கள் அம்மாவே எங்கு சென்றீர்?
தங்களை நாம் காணாது தவிக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இங்கு நித்தம் இறைவனை வேண்டுகின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் சபிண்டீகரண ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அன்னாரின் இல்லத்தில் இன்று (15-03-99) திங்கட்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து எமது தெய்வமாகிவிட்ட அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

(சி/6774)


# இரவில் நடமாடியோர் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தவேளை இரவு 11.30 மணிக்கு வீதியால் சென்ற நால்வர் இராணுவத்தினரால் பிடித்துக் கட்டி வைக்கப்பட்டனர்.

துன்னாலைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் பகுதியிலேயே இவர்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.

இவர்கள் சரவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்களெனவும் இரவு ஆலயமொன்றில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிய வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரியவந்தது. (ஐ-15)

# விண்ணப்பதாரிகளின் விவரங்கள் பரிசீலனை

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை தேசிய வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகம் எஸ். பி. திவாரத்தினா மேற்கொண்டுள்ளார்.

தேசிய வரவு — செலவு திட்ட புள்ளிவிவரப் பகுதியும் — கணனிப் பகுதியும் நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற விண்ணப்பதாரிகள் பற்றிய விவரங்களைப்பரிசீலித்து வருவதாகவும் — விரைவில் ஆண்டு மூப்பின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஏற்கனவே அரச நியமனங்கள் கிடைத்த பட்டதாரிப் பயிலுநர் பற்றிய விவரங்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் இருந்து தேசிய வரவுசெலவுத் திட்டப்பணிப்பாளர் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-185)

# மன்னார் தொலைபேசி இலக்கங்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மன்னார் மாவட்ட தொலைபேசி சேவையில் புதிய உட்பிரிவு ஒன்றை ஸ்ரீலங்கா 'ரெலிக்கொம்' நேற்று முதல் செயற்படுத்தத் தொடங்கி உள்ளது.

தற்சமயம் மன்னார் மாவட்டத்தில் தொலைபேசி இணைப்பைப் பெற்றுள்ள பாவனையாளர்கள் இந்தப் புதிய உட்பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மன்னாரில் பாவனையில் உள்ள இலக்கங்களின் முன்பாக '3' என்ற இலக்கத்தைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அழைப்புக்களைப் பெற முடியும் என 'ரெலிகொம்' நிறுவனம் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கான பிரதேசக் குறியீட்டு இலக்கமான (Code Nubmer) 023 என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. (ஐ)

# நூலக வாரம்

வலி. தென்மேற்கு, மார்ச் 15

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நூலக வாரம் சிறப்புற நடைபெற்று வருகிறது.

கலை. இலக்கிய படைப்புகள் கொண்ட நூல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன இரவல் வழங்கும் பணியும் நடைபெறுகின்றது.

(ஐ-185)

# பெண்ணைத் தாக்கிவிட்டு கணவரைக் கடத்தினர்

## இராணுவத்தினர் கைவரிசை

கொழும்பு, மார்ச் 15

தென் மாகாணத்தைச் சேர்ந்த இராணுவ முகாம் ஒன்றின் கட்டளை அதிகாரியும் அவரது மரணப் படையினரும் பெண் ஒருத்தியை மோசமாகத் தாக்கிவிட்டு அவரது கணவனைக் கடத்திச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த 8 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு பொறளையில் இடம்பெற்றதாக ராணுவத் தலைமையகம் தெரிவிக்கிறது.

பிரிகேடியர் பந்துல ரணசிங்க லெப்டினன்ட் ஆர். எம். கிரியல்ல ஆகியோர் அடங்கிய நால்வர் கொண்ட குழுவினரே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சிவில் உடையில் காணப்பட்ட இந்த நால்வரும் பூஸா முகாமிலிருந்து ஆயுதங்களுடன் பொறளைக்கு வந்துள்ளனர் எனவும் —

ராணுவ வாகனத்தையே தங்கள பயணத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

அந்த வாகனத்தின் இலக்கத் தகடு அகற்றப்பட்டு போலி இலக்கம் இடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் பந்துல ரணதுங்க வட்டிக்குப் பணம் கொடுப்பவர் எனவும் கடத்தப்பட்ட சுசந்த நாரங்கொட என்பவருக்கு வியாபாரத்திற்காக 7 லட்ச ரூபாவை வட்டிக்குக் கொடுத்திருந்தார் எனவும் —

மாதாந்தம் வட்டியாக வழங்கப்பட வேண்டிய 07 ஆயிரம் ரூபாவை 3 மாதங்கள் மட்டுமே செலுத்தியிருந்தார் எனவும் —

தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பேச்சுக்களை மேற்கொள்ள அந்தத் தம்பதியினர் பொறளைக்கு அழைக்கப்பட்டனர். அப்போது அவர்கள் இருவரும் படையினரால் நையப் புடைக்கப்பட்டதுடன் கணவனான நாரங்கொடையைக் கடத்திச் சென்ற படையினர் பூஸா ராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளனர்எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய படை அதிகாரிகளைக் காப்பாற்ற இராணுவ முக்கியஸ்தர்கள் முயற்சி எடுத்து வருகின்றனர் என்று 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. மேற்கு கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களின் விலைகளில் சமநிலை பேண இணக்கம்

மூளாய், மார்ச் 15

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் சீரான விநியோகத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இயங்கும் கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசாவுடன் இவ்விடயம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். இதன் அடிப்படையில் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் தட்டுப்பாடு எதுவுமின்றி மக்களுக்கு கிடைக்கும் வகையில் விநியோக நடைமுறைகளை சீர் செய்வது என்றும்—

இப்பகுதியில் செயற்படும் மூன்று கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும், அத்தியாவசிய பண்டங்களின் விலைகளில் வேறுபாடுகளைத் தவிர்த்து சம நிலைத் தன்மையைப் பேணுவதுஎன்றும்—

தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தற்போது இக் கிளைகளில் அரிசி போதிய அளவில் இல்லை என்றும் உடனடியாக கிளைகளுக்கு அரிசியை அனுப்பி வைத்து சீரான விநியோகத்தை மேற்கொள்ளும்படியும் பிரதேச செயலர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஐ-99)


## விற்பனைக்கு உண்டு


புதிய பனசோனிக் ரெலிபோன்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

**கந்தன் களஞ்சியம்**
322, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(63838)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**கதிரவேலு பாலசிங்கம்**
(குஞ்சு)
(நீர்வேலி ப. நோ. கூ. சங்கம்.)

பிறப்பு 19 — 02 — 1954

மறைவு 26 — 03 — 1998

திதி: திரயோதசி - 15 — 03 — 99

மனைவி, மக்கள், உறவினர்.

தோப்பு,
அச்சுவேலி.

(63852)

## தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். றக்காறோட் மற்றும் சோமசுந்தரம் அவெனியூப் பகுதிகள் நேற்று முன்தினம் காலை முதல் படையினரால் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

வீதிகளில் சென்ற பலரும் படையினரால் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர்.

(இ-7)


கணக்கிடு
**A/L 2000**
**சைன் அக்கடமி**
K.K,S. வீதி, மல்லாகம்.

ஆசிரியர்:
திரு. முகுந்தன்

ஆரம்பம்:
15 - 02 - 99

(63865)



# ARUN SPORTS SPOT

FOR
ALL YOUR SPORTS REQUIREMENTS

| | |
|---|---|
| * CRICKET : | Bats - Cricket Balls - Pads - Gloves - Thigh Pads Arm guards - Cricket Suits - Wickets - Score books Cricket shoes - Cricket Caps etc. |
| * FOOT BALL : | Mikasa - Molten - Gold Cup. |
| BOOTS : | Gold Cup - Hawk - Stockings etc. |
| * VOLLEY BALL : | Mikasa - Gold Cup - Nets etc. |
| * BASKET BALL : | Mikasa - Nets etc. |
| * BADMINTON RACQUETS : | Carlton - Yonex. |
| SHUTTLE COCK : | Carlton - Yonex. |
| NETS : | Carlton - Gold Cup Towel Grips etc. |
| * TABLE TENNIS RACQUETS : | Dunlop - Butterfly – Sriver - Mark V. |
| * T. T BALLS : | Champion - Double Happiness - Nittaku etc. |
| * CARROM : | Boards - Discs - Strikers - Powder etc. |
| * SOFT BALL : | Bats - Tennis Balls. |
| * MUSICAL INSTRUMENTS : | Tamparin - Flutes - Marakas - Triangles - Mouth Organ. |
| * GENERAL : | Bottoms - Caps - T. Shirts - Skipping Ropes Wrist Bands - Head Bands - Black Socks etc. |

347, KASTHURIAR ROAD,
JAFFNA.

(C/6775)


## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

இளவாலை, மார்ச் 15

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெற உள்ளது.

(ஐ-48)


வளன்புரம், கொழும்புத்துறை

## புனித சூசையப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா

16 - 03 - 99 — 19 - 03 - 99

18 - 03 - 99 — 19 - 03 - 99 வரை ஆயத்த வழிபாடுகள் தினமும் 5. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

19 - 03 - 99 காலை 6 45 மணிக்கு பெருநாள்

கூட்டுத்திருப்பலி ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருப்பலியைத் தொடர்ந்து திருச் சொரூபப் பவனியுடன், ஆசீரும் இடம் பெறும்.

அருட்திரு. சாள்ஸ் கொலின்ஸ்
(பங்குத் தந்தை)

பங்கு மக்கள் (வளன்புரம்)

திரிதின மறையுரைகள்:

அருட்திரு. லூயிஸ் பொன்னையா அ.ம.தி.

(யாவும் புதிய நேரப்படி)

(63846)


## பருத்தித்துறை பிரதேசசபை
## கேள்வி அறிவித்தல்

**மந்திகை சந்தை, மாணாண்டி சந்தை, மாயக்கை சந்தை, மருதங்கேணி சந்தைகளில் கட்டப்பட்டுள்ள தலா 02 கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை (08).**

01. மேற்படி இடங்களில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 24 . 03 . 1999 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4. 45 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விப்பத்திரங்கள் 23 . 03 . 99 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12. 30 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 100- உம் (மீளளிப்பு செய்யப்படும்). கேள்விப்பாதுகாப்பு வைப்புப்பணமாக ரூபா 1000- உம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.

03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக, 'தலைவர், பருத்தித்துறை பிரதேச்சபை, புலோலி' என முகவரியிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடைகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் காரியாலயத்தில் இதற்கென வழங்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டிகளில் போடப்படல் வேண்டும்.

04. தற்பொழுது இப்பிரதேச சபையின் கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவு செய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவருக்கோ அல்லது அந்நபரது கணவன்/மனைவி எவருக்கேனும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.

05. கடைகளைத் தெரிவுசெய்யும் முன்னுரிமை கூடிய கேள்வியின் அடிப்படையிலேயே வழங்கப்படும்.

06. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கடையைப் பொறுப்பேற்காது விடின், அவரது கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

07. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.

08. மேற்படி கடைகளில் பின்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
   1) தேநீர்க்கடை
   2) மீன் / இறைச்சி / கருவாடு / இறால் முதலியன விற்பனை செய்தல்.
   3) மதுபான சாலை
   4) மரக்கறி வியாபாரம்

09. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைககு பூரண அதிகாரம் உண்டு.

10. ஒவ்வொரு கடையின் ஆகக்குறைந்த கேள்வித் தொகை பின்வருமாறு:
   1) மந்திகை சந்தைக்கடை — ரூ. 80,000,00
   2) மாணாண்டி சந்தைக்கடை — ரூ. 60,000,00
   3) மாயக்கை சந்தைக்கடை — ரூ. 50,000,00
   4) மருதங்கேணி சந்தைக்கடை — ரூ. 35,000,00

11. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகநேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்,
தலைவர்.

பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.

(சி/6759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டோ ஸ்ரட்

போட்டோ ஸ்ரட் ரோணர், பாட்ஸ் கனொன் 1215, சாப் 1016, கெஸ்ணர், ரொசிபா, சொளிக்கா, பனசொனிக் மற்றும் லெமனேற்றிங் மெசின் அதற்குரிய அளவுகளில் லெமனேற்றிங் சீற், ரேடியோ, மணிக்கூடு, மணிக்கூடு பற்றறி, பிலிம்றோல் என்பன நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு.

**செல்வம் ஸ்ரோர்ஸ்**
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(63832)

## யாழ். மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை
## பழைய மாணவர் சங்கம்

ஆயுட் கால உறுப்பினரின் தொடர்பிற்கு தற்போதைய தொடர்பு முகவரி வேண்டப்படுகின்றது. 30-03-99 இற்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றோம். சாதாரண அங்கத்தவர்கள் தமது 1998 — 1999 ஆண்டிற்கான உறுப்புரிமை சந்தா செலுத்திப் புதுப்பிக்குமாறும், புதிய அங்கத்தவர்கள் சேர்வதாயின் 30 - 03 - 99 இற்கு முன் சேர்ந்து கொள்ளுமாறும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். இவர்கள் 18 - 04 - 99 இல் நடைபெறும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள உறுப்புரிமை பெற்றவர்கள் ஆவர்.


இளைப்பாறிய அதிபர் க. நாகராசா அவர்களது சேவை நலன் பாராட்டு விழாவினை பாடசாலை சமூகம் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. இதில் பங்களிப்பு, ஆலோசனை வழங்க விரும்புவோர் செயலாளருடன் 20 - 03 - 99 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

த. நா. போஜன்,
சி. தேவகுமாரன்,
இணைச்செயலாளர்கள்.

(சி/6773)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



அமரர்
**சின்னத்தம்பி துரைராசா**
( மயிலிட்டி )

மலர்வு 07 — 03 — 1928
உதிர்வு 13 — 02 — 1999

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் இருந்தாய் அப்பா!
ஒரு நொடியில் பிரிந்த தப்பா உங்கள் உயிர்
தங்கள் முகம் காணாமல் த க்கின்றோம் இங்கிருந்து.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு (15-03-99) இன்று திங்கட்கிழமை அன்னாரின் இலலத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(63738)

## தமிழ் வர்த்தகர் கைது!

கொழும்பு, மார்ச் 15

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு எட்டரை லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களைக் கடத்த முயன்றார் எனக் கூறப்படும் தமிழ் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த வர்த்தகர் தீவிர விசாரணை செய்யப்படுகிறார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-3-7)

## அமெரிக்காவில் இயங்கும் கொலைக் கும்பல்களில் 25 இலங்கையர்கள்

அமெரிக்காவிலுள்ள சிக்காகோ மற்றும் நியூ ஓர்லியன்ஸ் நகரங்களில் ரகசியமாகச் செயற்பட்டுவரும் கொலை மற்றும் போதை வஸ்துக் கும்பல்களில் இலங்கையைச் சேர்ந்த 25 பேர் அங்கம் வகிப்பதாக அமெரிக்கப் பொலீஸார் சிறிலங்காப் பொலீஸாருக்குத் அறிவித்துள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சிறிலங்கா பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர்களே நாட்டிலிருந்து தப்பி ஓடி மேற்படி கும்பல்களில் சேர்ந்துள்ளதாக குற்றத் தடுப்புப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். இந்தக் கும்பலில் பாதாள உலகைச் சேர்ந்த முன்னாள் முக்கியஸ்தர்களும் அடங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுக்களில் அங்கம் வகிக்கும் இலங்கையர்கள் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்கள் பற்றிய பட்டியலையும் அவர்களது பெருவிரல் அடையாளங்களையும் சிறிலங்காபொலீஸார் அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளனர் — என்று 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-10)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம்
வலிகாமம், தென்மராட்சி வலயங்கள்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம், தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களங்களின் கேள்விச் சபைத் தலைவரால் 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி முற்பகல் 10 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலைப் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கபபடும வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01. | யா/வரணி ம.வி. வளவில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்குச் சுற்று மதில், குழாய்க் கிணறு அமைத்தல், குழாய் நீர் வசதிகளும் 400 கலன் கொள்ளளவுள்ள பிளாஸ்ரிக் நீர்த் தாங்கியும் வழங்குதல், கரும்பலகை அமைத்தல், முட்கம்பி வேலிகள் அமைத்தல் முதலானவை. (ஐ சீ ரி.ஏ டி. பதிவு எம் 9 -ம் அதற்கு மேலும்.) | 250/- | 20,000/- |
| 02. | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி வளவில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்குச் சுற்று மதில். குழாய்க் கிணறு அமைத்தல், குழாய் நீர் வசதிகளும் 400 கலன் நீர் கொள்ளளவுள்ள பிளாஸ்ரிக் நீர்த்தாங்கியும் வழங்குதல், கரும்பலகை அமைத்தல், முட்கம்பி வேலிகள் அமைத்தல் முதலானவை. (ஐ.சீ.ரி.ஏ டீ. பதிவு எம் 9 -ம் அதற்கு மேலும்.) | 250/- | 20,000/- |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ஐ சீ.ரி.ஏ டீ ) நிறுவனத்தின் தரம் எம் 9 ஆம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில், பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை; பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை வலிகாமம், தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களங்களின் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 99.03.15 ஆம் திகதியிலிருந்து 99.03.18 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை யாழ். வலயக் கல்வித்திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையிற் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிற் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு 'தலைவர், கேள்விச்சபை, யாழ். வலயக் கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்' என விலாசமிடப்பட்டு யாழ். வவயக் கல்வித்திணைக்களத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 1999 03-30 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றோம்.

வீ. இராசையா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
99. 03. 10

(சி/6772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சேற்று நீர் அருந்தலாமா?

குண்டுத் தாக்குதல் தடைச்சட்டம் ஒன்றை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் கொண்டு வந்து நிறைவேற்றி உள்ளது.

குண்டுத் தாக்குதல் தடை சம்பந்தமான ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதால், இலங்கையிலும் அதனை நடைமுறைப்படுத்தச் சட்டம் கொண்டு வருவது காலத்தின் தேவை — என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சட்ட மூலத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில் சொன்னார்.

நிராயுதபாணிகளான மக்களையும் அவர்களின் உடைமைகளையும் பாதுகாப்பதே இந்த சட்டமூலத்தின் நோக்கம் என்றும்—

பிரிவினைக்காகப் போராடும் பயங்கரவாதிகளாலும் வேறு தீவிரவாதிகளாலும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அவற்றைத் தடுப்பதற்காகவே இச்சட்டம் கொண்டு வரப்படுகிறது என்றும் — கதிர்காமர் தமது பேச்சில் தெரிவித்திருக்கிறார்.

இந்த நாட்டின் அரசாங்கங்கள் தமிழர்களுக்கு எதிராக அடக்குமுறையைக் கட்டவிழ்த்ததாலேயே பிரிவினைக் கோரிக்கை எழுந்தது.

தமிழர்களின் உரிமைகளை வழங்க மறுத்து, அவர்களுக்குச் சமத்துவமும் நீதியும் வழங்க விரும்பாது, இராணுவ பலத்தின் மூலம் அவர்களை அடக்கி ஒடுக்குவதற்காகப் பல சட்டங்களை மாறி மாறிப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகள் கொண்டு வந்ததாலேயே —

உரிமை கேட்டு நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் தொடர்ச்சியாகத் தோல்வி கண்டதாலேயே — தமிழர்கள் ஆயுதம் ஏந்தினார்கள் என்பது கதிர்காமருக்குத் தெரியாதா?

குண்டுத் தாக்குதல்கள் போன்ற வன்முறைகளுக்கு மூல காரணம் என்ன என்பதனை நியாய சிந்தையுடன் பகுத்து உணர்ந்து அநீதிகளைக் களைவதற்கு — நோயைக் கண்டறிந்து அதற்குச் சிகிச்சை அளித்துக் குணமாக்குவதற்கு — பதிலாக ஏட்டிக்குப் போட்டியாக இத்தகைய சட்டங்களைக் கொண்டு வருவதால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்படும் அநீதிகள் களையப்பட்டு, அவர்களுக்குரிய உரிமைகளை ஒறுக்காமல் வழங்க வேண்டும். அதில் மனதார அக்கறை கொண்டு சமாதான வழியில் அரசியல் தீர்வு காண உழைப்பது அவசியம்.

ஆனால் தென்னிலங்கை அரசுகளோ பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய சரியான வழிமுறையைக் கைக்கொள்வதற்குப் பதிலாக —

மேன்மேலும் இராணுவ இறுக்கத்தைக் கொண்டு வரும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றன.

அதன் பெறுபேறே அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், குண்டுத் தாக்குதல் தடைச் சட்டம் என்ற கைவரிசைகள்.

சுத்தமான, சூடான பசும்பால் இருக்க, அதனை ஒதுக்கிவிட்டு, தேடிச் சென்று சேற்று நீர் அருந்தும் புத்தி இது! இவ்வாறெனில் நோய் எவ்வாறு குணமாகும்?

# அரசாங்கப் பாடசாலைகள் இனிமேல் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும்

## மேலதிக கல்விப் பணிப்பாளர் விவரிக்கிறார்

பருத்தித்துறை, மார்ச் 15

நாட்டில் உள்ள அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் இரண்டு வகைகளுக்குள் பிரிக்கப்பட உள்ளன. வலயக் கல்விப்பணிப்பாளர்களின் நடவடிக்கையின் கீழ் இந்த மறுசீரமைப்புப் பணி நடைபெற உள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் மேலதிக கல்விப்பணிப்பாளர் இ. சிவானந்தன் இத் தகவலைத் தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பாக வடமராட்சி வலய அதிபர்களுக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி. சிவராசா தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

திரு. சிவானந்தன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய கல்விச் சீர்திருத்தம் முற்றிலும் உலக வங்கியின் சிபார்சின் பேரிலேயே நடைபெறுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின், ஆட்சிக்காலத்தில் பாடசாலைகள் மறுசீரமைப்புத் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் சிபார்சைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது இலங்கையில் நான்கு வகையான பாடசாலைகளுடன் தேசிய பாடசாலை, தனியார் பாடசாலை சர்வதேச பாடசாலை என்பன உள்ளன. இவற்றில் அரச பாடசாலைகள் மட்டும் இரண்டு வகைகளுக்குள் கொண்டுவரப்படவுள்ளன. தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரையுள்ள பாடசாலைகள் ஒன்றாகவும் —

தரம் 10 முதல் தரம் 13 வரையுள்ள பாடசாலைகள் ஒன்றாகவும்— வகுக்கப்பட்டு மறுசீரமைக்கப்படவுள்ளன. இந்த மறுசீரமைப்புக்கு தற்போது அமைக்கப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களே உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் எந்த ஒரு பாடசாலையும் மூடப்படமாட்டாது. பாடசாலையின் எண்ணிக்கை குறைய மாட்டாது. ஆனால் பாடசாலைகளை இணைக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன. தற்போது தரம் ஐந்து வரையுள்ள பாடசாலைகளின் தரத்தினைத் தரம் ஒன்பது வரை உயர்த்தவும் முடியும். அதே சமயம் தற்போது தரம் பதினொன்று வரையுள்ள பாடசாலைகளை தரம் ஒன்பது வரை குறைக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

தரம் ஒன்றில் இருந்து தரம் ஒன்பது வரையுள்ள பாடசாலைகள் இரண்டு கிலோ மீற்றருக்கு ஒன்றாக இருக்க வேண்டும். அதே போல சில பின்தங்கிய பகுதிகளில் விசேடமாக தரம் ஒன்றில் இருந்து தரம் பதினொன்று வரையான வருப்புக்கள் நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு ஒன்றாகத் தீர்மானிக்கப்படவுள்ளன. அதேபோல ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்குரிய பாடசாலை எட்டுக் கிலோ மீற்றருக்கு ஒன்றாக இருக்க வேண்டும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது ஒன்று ஏபி தரத்திலுள்ள பாடசாலை இரண்டாகப் பிரிக்கப்பட்டு அங்கு இரண்டு அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்தப் பாடசாலைகளின் பெயர்களும் மாற்றப்படும்.

ஒவ்வொரு மறுசீரமைக்கப்படும் யாடசாலைக்கும் கட்டட வசதி. தளபாட வசதி, உபகரண வசதி, நூலக வசதி போன்ற சகல வசதிகளையும் செய்து கொடுக்க உலகவங்கி முன்வந்துள்ளது.

இப்பாடசாலை மறுசீரமைப்பு வேலைகளை வலயக் கல்வித்திணைக்களங்கள் தற்போதே ஆரம்பிக்கலாம். இது தொடர்பான நெருக்குதல்கள் மாகாண கல்வி அமைச்சுக்கு வந்து கொண்டிருக்கின்றன. தீவுப்பகுதி அடங்கலாக சகல பாடசாலைகளும் 2001ஆம் ஆண்டுக்கு முன்னர் மறுசீரமைக்கப்பட வேண்டும் என கல்வி, உயர்கல்வி அமைச்சு பணித்துள்ளது.

ஆசிரிய ஆளணி வளப் பற்றாக்குறையைப் போக்க பல திட்டங்கள் உலக வங்கியின் நிதி மூலம் செயற்படுத்தப் படவுள்ளன. தற்போதுள்ள ஆசிரிய ஆளணி பற்றிய கணக்கெடுப்பு சகல வலய மட்டத்திலும் பூர்த்தியானதும் ஆசிரிய ஆளணியினரை உருவாக்குவதற்கு கல்விக் கல்லூரிகள் பல அமைக்கப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் விரைவில் கல்விக் கல்லூரி ஒன்று கோப்பாய்த் தொகுதியில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிலத்தினை பலர் அன்பளிப்புச் செய்ய மு.. வந்துள்ளனர்.

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் போது தற்போதுள்ள கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளுடன் புதிய தொழில்நுட்பப்பிரிவு அறிமுகம் செய்யப்படவுள்ளது. இவற்றுக்கான பாடத்திட்டத்தை தேசிய கல்வி நிறுவனம் அமைத்து வருகிறது. அடுத்த ஆண்டு ஜீ. சீ. ஈ. உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு புதிய தொழில் நுட்பப் பிரிவு பாடநெறி அறிமுகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள குழுவேலை என்னும் பாடநெறி ஐந்து அறைகளைக்கொண்டதாக இருக்கும். முதலாம் அறையில் கற்கவுள்ள பாட நெறிகளுக்கான சகல கையேடுகளும் பேணப்படும். அடுத்த அறையில் நிறைவேற்றுக் கருவிகள் வைக்கப்படும். மூன்றாம் அறையில் மனைப் பொருளியல் உபகரணங்களும் நான்காம் அறையில் நுண்கலை தொடர்பான உபகரணங்களும் ஐந்தாம் அறையில் விவசாய உபகரணங்களும் வைக்கப்படும். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஆசிரியர் தத்தம் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவார். வினாவில் யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்குத் தேவையான கையேடுகள் நிறைவேற்றுக் கருவிகள், உபகரணங்கள் என்பனவற்றை வடக்கு— கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட வாழ்க்கைத் தேர்ச்சி தொடர்பான கைந்நூல்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதன் முக்கிய நோக்கம் மானிடப் பண்புகளை வளர்த்தலேயாகும். மனிதவிருத்தி தொடர்பான விடயங்கள் அடங்கியுள்ளன. ஏற்கனவே வழங்கப்பட்ட சமாதானக் கல்வி போன்ற நூல்களை ஆதாரமாகக் கொண்டு இப்பாடநெறியைப் போதிக்கலாம்.

கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின் வெற்றி அதனை முன்னெடுக்கும் அதிபர்களின் கைகளிலேயே உள்ளது அரசின் திட்டம் என்று நோக்காது மாணவர் கல்வி அபிவிருத்தித் திட்டம் என்ற பார்வையில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

(ஐ-118)

## வீதி திருத்தம்

கொழும்புத்துறை, மார்ச்15

அரியாலை செம்மணி ஒழுங்கை, ஆனந்தம் வடலி வீதி மற்றும் வடக்குப்புற வீதிகள் கடந்த 20 வருடங்களாகத் திருத்தப்படவில்லை!

இவ் வீதிகளால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது. (ஐ-30)

## நீர் விநியோக ஆரம்ப வைபவம்

நெடுந்தீவு, மார்ச் 15

நெடுந்தீவு குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. அது பொதுமக்களின் பாவனைக்காக நாளை மறுதினம் புதன்கிழமை திறந்து வைக்கப்படும்.

குடி தண்ணீர் விநியோக அமைப்புத் திட்டக் குழுவின் தலைவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் நடைபெறும் ஆரம்ப வைபவத்தில் ஐரோப்பிய சமூகத்தின் தூதுவர் இல்கா இசிற்லோ கலந்து கொண்டு நீர் விநியோகச் சேவையைத் தொடக்கி வைப்பார்.

(ஐ-111)

## தவக்காலச் சிந்தனை-27

பணி செய்வதற்கு காலம், நேரம், இடம் கிடையாது. மனம் இருந்தால் போதும். எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எந்தக்காலத்திலும் யாருக்கும் பணி செய்யலாம். அடிப்படைத்தேவை நல்ல மனந்தான். இன்றுபணி செய்யப்புறப்படுகின்றவர்கள் எது நல்ல இடம், இலகுவான வழி எது, இதனாலேயே எமக்கு எவ்வளவு நன்மை உண்டு என்று இடமறிந்து, காலமறிந்து, ஆட்கள் அறிந்து பணி செய்யப புறப்படுகின்றார்கள்.

இயேசு சென்ற இடங்களில் எல்லாம் நன்மை செய்து, கொண்டு சென்றார். அதனாலே அவரைக் கண்ட மக்கள் அவரை வரவேற்று அவரிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டார்கள். திருமண வீட்டிலும், இறந்தவர் வீட்டிலும் நோயுற்றோர் வீட்டிலும் சென்று அவர்களுக்கு உதவினார். அவர் கூறிய வார்த்தைகளாலே அற்புதங்கள் நடந்தன. நம்பிக்கை கொண்டவர்கள் நன்மையடைந்தார்கள்.

இன்று சமுதாயத்தில் பணி செய்பவர்கள் செய்துகொண்டேஇருக்க, தாமேபணியாளர்கள் என்போர் மற்றவர்களிடம் என்ன தகைமையுண்டென்ற அருங்குறி கேட்கிறார்கள். இவர்களும் இயேசுவிடம் அருங்குறிகேட்ட மக்களைப் போன்றவர்களே. நீயும், நானும் யாரைச்சார்ந்தவர்கள்?.

- அன்ரனி பீற்றர்

### உதய வாக்கு

கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.

- சுவாமி விவேகானந்தர்

### நாளை

பங்குனி 2

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி பின்னிரவு 2. 20 வரை.

நட்சத்திரம்: சதயம் பின்னிரவு 2.15வரை.

சுபநேரம்: 10.51-12.21

ராகுகாலம்: 3.21 4 51

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


### யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

## வைத்தீஸ்வரனைத் துதிப்பாய்!

பல்லவி

பண்ணமுதம் பாடித் துதிப்பாய் — மனமே
வண்ணை வைத்தீஸ்வரனை
வாலாம்பிகைத் தாயைத்தினம்

அனுபல்லவி

தண்ணருளைப் பொழிந்திடுவான்
தையல் நாயகி மணாளன்
மண்ணதிலே யாழ்ப்பாண
மாநகர்கோ யில்கொண்டானை

சரணம்

மாணிக்கவாசகத்தேன் மாந்திட மண்சுமந்தான்
கோணிக் குழைந்தழுத குழவிக்கு அருள் புரிந்தான்
காணிக்கையாகத் தமிழ்கவிதைக்குத்தூதுசென்றான்
ஆணிப்பொன் அம்பலவன் அம்மை வாலாம்பிகை
[illegible]
[illegible]

- மஹாவித்துவான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் கடற்கரையில் மீன்பிடிக்க அனுமதி பெறுவதில் மீனவர் சிரமம்

மூளாய், மார்ச் 15

சுழிபுரம் கடற்கரைப்பகுதியில் மீன் பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதில் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுழிபுரம் கடற்கரைப் பகுதிகளான திருவடிநிலை, சம்பில்துறைபோன்ற பகுதிகளில் கடற்தொழில் செய்வதற்கு பொன்னாலை கடற்படைமுகாமில்அனுமதிப்பத்திரங்களைபெற்றிருத்தல்வேண்டும். இவ்வாறு கடற்படையினர் வழங்கும் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதிலும், அவற்றைப் புதுப்பித்துக் கொள்வதிலும் கடற்றொழிலாளர்கள்பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

புதிதாகத் தமது பகுதியில் மீளக் குடியமர்ந்த மீனவர்கள் பலர் மீன்பிடி அனுமதிக்காக விண்ணப்பஞ் செய்து ஆறு மாதங்கள் கடந்தும் இதுவரை அனுமதிப் பத்திரங்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் தொழில் இன்றி வறுமையில் வாடுகின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

(ஐ—99)

## ஓவியப் போட்டி

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 15

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் ஓவியப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை சித்திரப் பாட ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு கவின் கலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கல்வி உயர்கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் பின்லாந்து கலாசார மையம் ஆகியன இணைந்து ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(க-133)

# நீரிறைக்கும் இயந்திரங்கள் 'ஹண்டி' கப்பலில் வந்தன

அரியாலை, மார்ச் 15

யாழ். மாவட்ட விவசாய, உற்பத்தி, நுகர்வோர் கூட்டுறவு சமாசத்திற்கு 'ஹண்டி' கப்பலில் 45 நீரிறைக்கும் இயந்திரங்களும், அல்கத்தீன் பைப்புகளும் எடுத்துவரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை துறைமுகத்தில் இக் கபபலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 500 கல்வனைஸ் வாளிகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பனவும் சமாசத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

# ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்த திட்டம்

கொழும்பு, மார்ச் 15

ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிவடைந்ததும் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய தேவை குறித்து பல மூத்த அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளனர் என்று 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

உரிய நேரத்தில் பொதுத் தேர்தல்நடத்தப்பட வேண்டுமாயின் அத் தேர்தல் அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே நடத்தப்பட வேண்டும். அதேபோல் ஜனாதிபதித் தேர்தலும் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலேயே நடத்தப்படவேண்டும்.

குறித்த திகதிகளுக்கு முன்னர் மேற்படி தேர்தல்களை நடத்தினால் தேர்தல் முடிவுகள் அரசுக்குச் சாதகமாக அமையும் எனக் கருதப்படுகிறது.

வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக சமூக சேவைகள் அமைச்சர் பேர்டி பிரேமலால் திஸநாயகாவும், மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக சுற்றாடல் அமைச்சர் நந்தமித்திர ஏகநாயகாவும் நியமிக்கப்பட்டுள்ளமை ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் உரிய நேரத்திற்கு முன்னர் நடத்துவதற்கான சாதகமான சூழ் நிலைகளை உருவாக்குவதற்காகவே எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## சிறுகதைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெள்ளிவிழாவினை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்களிடையே தமிழ் மன்றத்தினால் சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னேற்பாடாக எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் சிறுகதைப் பயில்களத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

போட்டியில் பங்கு பற்றுவோர் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை ,தலைவர், செயலாளர், தமிழ் மன்றம்; யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

# இம்மாத இறுதியில் 'பொன் அணிகள் போர்'

வலி. தென்மேற்கு, மார்ச் 15

வடக்கின் மாபெரும் கிரிக்கெட் ஆட்டங்களில் ஒன்றான 'பொன் அணிகள் போர்' எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான இந்த வருடாந்த கிரிக்கெட் மோதல் இம்முறை மிகவும் சிறப்பான ஏற்பாடுகளுடன் நடத்தப்பட உள்ளது.

இந்த ஆட்டத்தில் சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த பந்துத் தடுப்பாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர், சகல துறைகளுக்குமான ஆட்ட வீரர்கள் ஆகியோருக்கான கிண்ணங்கள் வழங்கப்படும்.

(ஐ-185)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வேலணை, மார்ச் 15

வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ—167)

## பக்தர்கள் கோரிக்கை

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் முன்னுள்ள பாலத்தினூடாக மோட்டார் சைக்கிள்களிலும் ஏனைய வாகனங்களிலும் வெளியிடங்களுக்கு விற்பனைக்காக மீன் கொண்டு செல்வதைத் தடைசெய்ய வேண்டுமென அண்மையில் நடைபெற்ற ஆலய மகா சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இப்பாலத்தினூடாக மீன் கொண்டு செல்வதால், அன்றாடம் ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாக முறைப்பாடு செய்ததையடுத்தே இப்பாலத்தினூடாக மீனைக் கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பிற தீவுகளிலிருந்தும் வளர்ப்புக்காக எனக் கூறி கால்நடைகளைக் கொண்டு வந்து இதே பாலத்தினூடாக யாழ்ப்பாணத்திலுள்ள கொல்களத்திற்குக் கொண்டு செல்வதனையும் தடைசெய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-167)

# யாழ். கூ. சங்க கிளைகளில் ரவை விநியோகம்

அரியாலை, மார்ச் 15

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியிடம் இருந்து ஒரு தொகுதி ரவையைக் கொள்முதல் செய்துள்ளது.

சங்கத்தினால் கொள்முதல் செய்யப்பட்ட ரவை கடந்த சனிக்கிழமை சங்கத்தின் சகல கிளைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ரவையை இன்று திங்கட் கிழமை தொடக்கம் ஒரு கிலோ 25 ரூபா படிப் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று சங்க கொள்முதல் அதிகாரி இ. முருகானந்தன் தெரிவித்தார்.

(ஐ-17)

# செய்திக் கொத்து

## விநியோகம்

சண்டிலிப்பாய், மார்ச் 15

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பாவனையாளர்களுக்கு செத்தல் மிளகாயை கிலோ 195 ரூபாவுக்கு விநியோகம் செய்துவருகிறது.

(ஐ-135)

## விழாக்குழு அமைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 15

சாவகச்சேரி பெரிய மாவடி 'வித்தகம் சுவாமி' யின் 50 ஆவது ஜெயந்தி தின விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்காக விழாக்குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. [ஐ-7]

## மாணவருக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 15

வலிதென்மேற்கு பிரதேசசபைஇப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கற்கும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு 4 ஆயிரம் வாய்ப்பாடு அட்டைகளை இலவசமாக அண்மையில் வழங்கியுள்ளது. வலி தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன் இத்தகவலைத் தெரிவித்தார்.

(ஐ-135)

## அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வித்தியாலய புதிய அதிபர் எஸ். சோமேஸ்வரபிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(ஐ-17)

## பதவி வெற்றிடம்

உரும்பிராய், மார்ச் 15

வலி. கிழக்கு பிரதேச சபையில் வருமான மேற்பார்வையாளர், சகாதாரத் தொழிலாளி, காரியாலய காரிய சகாயர், நூலகத் தொழிலாளி ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமைதிக்கு முன்பு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி செயலாளர் கோரியுள்ளார். (ஐ-154)

## கூ. சங்கத்துக்கு மோட்டார் சைக்கிள்கள்

அரியாலை, மார்ச் 15

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பஜாஜ் ஸ்கூட்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை கொழும்பில் இருந்து தருவித்துள்ளது. (ஐ-17)

## உருவப்படம் திரைநீக்கம்

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும், புற்றளை சனசமூக நிலையத்தினதும் ஸ்தாபகர்களில் ஒருவரான அமரர் பண்டிதர் கு. க. வைரவனாரின் உருவப்படம் புற்றளை சனசமூக நிலைய மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இவற்றின் ஸ்தாபகர்களில் மற்றொருவரான நா. க. ஆறுமுகம் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

(ஐ-173)

## கிராம அபிவிருத்திச் சங்கம்

வலி. தென்மேற்கு, மார்ச் 15

நவாலிதெற்குப்பகுதிக்கு விரைவில் புதிய கிராம முன்னேற்றச்சங்கம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் க. சிறிபதி மேற்கொண்டுள்ளார்.

(ஐ-185)

## தொலைக்காட்சி விவரணப் படம்

வடமராட்சி, மார்ச் 15

பாடசாலை செல்லாத, இடையில் பாடசாலையை விட்டு விலகும் சிறுவர்களின் பிரச்சினையையும் இவர்களுக்கான மாற்றுத் திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் மையமாக வைத்து 'பள்ளிப் பருவத்திலே' என்ற தலைப்பில் தொலைக்காட்சி விவரணப்படம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவு செயல் திட்ட உதவியாளர் வே. அம்பிகைபாகன் இவ் விவரணப்படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

சுமார் 45 நிமிட நேரத்தைக் கொண்ட இப் படம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது.

(ஐ-173)

## குடி தண்ணீர் பெறுவதில் சிரமம்

கோப்பாய், மார்ச் 15

கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் இன்மையால் மாணவர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இப்பாடசாலைக்கு 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் மின்சாரப் பம்பி இருந்தது. ஆனால் தற்போது இப்பிரதேசத்திற்கு மின்சாரம் கிடைக்காமையால் அதனைச் செயற்படுத்த முடியாதுள்ளது.

இப்பாடசாலையில் தண்ணீர்த் தாங்கி, நீர் விநியோகக் குழாய்கள் எல்லாம் சீராக இருந்தும் நீர் இறைக்கும் இயந்திரம் இன்மையால் மாணவர்கள் மிக ஆழமான கிணற்றிலிருந்து சிரமப்பட்டே நீரைப் பெறுகின்றனர்.

(ஐ-72)

## பணிஸினுள் கரப்பான்பூச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 15

உண்பதற்காக வாங்கிய பணிஸ் ஒன்றைப் பிரித்த போது அதனுள் கரப்பான் பூச்சி கிடக்கக் காணப்பட்டது.

யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் கடை ஒன்றில் வாங்கிய பணிஸிலேயே இக்கரப்பான் பூச்சி காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15)

## நன்னீர் மீன் வளர்ப்பு

தென்மராட்சி, மார்ச் 15

பளைப் பிரதேசத்தில் 'கெயர்' நிறுவன உதவியுடன் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பகுதியில் 'கெயர்' நிறுவனத்தினரால் ஆழமாக்கப்படும் குளங்களில் நன்னீர் மீன் வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க் கோஷம் நடவடிக்கை மூலம்

# படையினர் கைப்பற்றிய பகுதிகளில் வழமைநிலை இன்னும் திரும்பவில்லை

### மக்கள் அச்சத்துடன் வாழ்க்கை

வவுனியா, மார்ச் 15

வன்னி ''போர்க் கோஷம்'' படையினர் கைப்பற்றிய இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் மக்களின் நாளாந்த வாழ்கை இன்னமும் வழமை நிலைக்குத் திரும்பவில்லை. அப்பகுதி மக்கள் அனைவரையும் படையினர் தற்போது குடும்ட'ம் குடும்பமாகப் படம் எடுத்து வருவதால் மக்கள் மத்தியில் ஒருவித அச்சம் நிலவுகின்றது என்று கூறப்படுகிறது.

படையினர் இப் பகுதிக்கு எதுவித எதிப்புமின்றிச் சென்றபோதிலும் பிரதான பாதைகளைவிட ஏனைய வீதிகள், ஒழுங்கைகளுக்குத் தற்போதே செல்லத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு செல்லும் படையினர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் குடும்பம் குடும்பமாகப் படம் எடுப்பதுடன் இளைஞர்களைத் தனித்தனியாகப் படமெடுத்து வருகிறார்கள்.

இதைவிட மக்களிடம் பணம் இல்லாததால் பணப்புழக்கம் வெகுகுறைவாக உள்ளது. நெல் மூடைகளை வைத்திருப்போர் அவற்றில் இரு மூடைகளை மட்டுமே வவுனியாவுக்குக் கொண்டு வந்து விற்பனை செய்ய அனுமதிகப்படுகிறார்கள். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள வயல்களுக்குச்செல்வோருக்கும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இவ்வாறான பகுதியில் அருவி வெட்டவோ, சூடு மிதிக்கவோ செல்வோரிடமிருந்து அடையாள அட்டைகள் பெறப்பட்ட பின்பே அவர்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். அதுவும் இரவு வேளைகளில் அவர்கள் வயல்களில் தங்க முடியாது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பவர்களுக்கு இன்னமும் பாஸ்கள் வழங்கப்படவில்லை. வவுனியாவுக்குச் சென்று வருவதற்கு ஒரு பஸ் மட்டுமே உள்ளதால் நகருக்கு மக்கள் வந்து செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளில்மாணவர் வரவு வெகு குறைவாகவே உள்ளது. சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் இருக்கும் பாடசாலை விமானக் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் மாணவர் வரவும் வெகு குறைவாகவேயுள்ளது. பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர் பெரிதும் தயக்கம் காட்டுகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில்லாத பகுதிகளிலிருந்து இங்கு வருவதற்கு பொது மக்களை முள்ளிக்குளமூடாகப் படையினர் அனுமதிக்கின்றனர். (இ-10)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் இன்று காலை 9 மணிமுதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரிமைதானத்தில் நடைபெறும்.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ 15 வயது — மட்டுவில் கமலாசினி வி. எதிர் கச்சாய் அ. த. க. பாடசாலை.

★ 17 வயது — பளை மத்திய கல்லூரி எதிர் விடத்தல் பளை கமலாசினி வித்தியாலயம்.

★ 19 வயது — கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி. எதிர் பளை மத்திய கல்லூரி.

(இ-3)

## நிவாரண விநியோகம்

அரியாலை, மார்ச் 15

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான 72 'ஏ' 'பி' புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள் விநியோகம் கடந்த 12 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ. வீ, கே. சிவஞானம் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகள் ஊடாக இந்த விநியோகம் ஆரம்பமாகியுள்ளது.

சிவப்பு நாட்டரிசி, சிவப்பு பச்சை அரிசி, சீனி, மைசூர் பருப்பு, ஹைலன்ட் பால்மா போன்ற பொருள்கள் நிவாரணத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## பல்கலை ஊழியர்

# வியாழனன்று மீண்டும் வேலை நிறுத்தம்

அம்பாறை மார்ச் 15

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவு 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து இன்று வரையான நிலுவைகள் வழங்கப்பட வேண்டும், ஆகியன உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களும் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

இதேவேளை —

அனைத்து பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனம் எதிர்வரும் 21 ஆம் திகதி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தும் என்றும் —

இந்தப்பேச்சுக்கள் தோல்வியடையும் பட்சத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் பல்கலைக் கழகங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு தொடர்ச்சியான தொழிற் சங்கப் போராட்டத்தினை ஊழியர்கள் நடத்தவுள்ளனர் என்றும் —

தென் கிழக்கு பல்கலைக் கழகஊழியர் சங்கத் தலைவர் எம், எஸ். எம். இஸ்தீன் தெரிவித்தார்.

(ஐ-6-14)

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பொங்கல் விழா

### மட்டுவிலுக்கு விசேடபஸ்

சாவகச்சேரி, மார்ச் 15

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவம் இன்று தொடக்கம் தொடர்ந்து ஐந்து திங்கள்கள் நடைபெறும்.

15 ஆம், 22 ஆம், 29 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் 5 ஆம், 12ஆம்திகதிகளிலும் உற்சவம் நடைபெறும்.

மார்கழி திருவெம்பாவைத் தினங்களில்நடைபெற்றுவந்த மகோற்சவ பெருவிழா இந்த வருடம் இரண்டாம் திங்களான 22 ஆம் திகதி தொடக்கம் பத்துத் தினங்கள் ஆலய பிரதமகுரு பா. பஞ்சாட்சரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்த வருடம் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் இடம்பெறவுள்ளது. புதிய தேர் வெள்ளோட்டம் 26ஆம் திகதி வெள்ளி காலை 8-00 மணிக்கு நடைபெறும்.

தேர்த் திருவிழா 30 ஆம் திகதி செவ்வாய்காலை 10-00 மணிக்கும், தீர்த்தத்திருவிழா 31 ஆம் திகதி புதன் காலை 10-00 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

இலங்கைப்போக்குவரத்துச் சபையும் தனியார் போக்குவரத்துச் சங்கமும் அடியார்களின் நன்மை கருதி ஆலயம் வரை விசேட போக்குவரத்துச்சேவையைநடத்தஉள்ளன

யாழ். நகரில் இருந்து வரும் போக்குவரத்துச்சபை பஸ்கள் நுணாவில் சந்தி கனகன்புளியடிச் சந்தி ஊடாக ஆலயம் சென்றடையும்.

கொடிகாமத்திலிருந்து வரும் பஸ்கள் சாவகச்சேரி நுணாவில் சந்தி ஊடாக கனகன்புளியடிச் சந்தியை அடைந்து ஆலயம்சென்றடையும்.

தனியார் போக்குவரத்துச் சேவையினர் கொடிகாமத்திலிருந்து புத்தூர்ச் சந்தி வேம்பிராய் ஊடாகவும்—

சாவகச்சேரியில் இருந்து மகளிர் கல்லூரி வீதி ஊடாகவும்—

சாவகச்சேரியில் இருந்து நுணாவில் சந்தி ஊடாகவும் ஆலயத்திற்கு போக்குவரத்துச்சேவையை நடத்தவுள்ளனர்.

ஆலயசுற்றாடலில் உணவுப் பண்டங்களை விற்பனை செய்பவர்கள்சுகாதாரப்பரிசோதகரின் அனுமதியுடன் விற்பனை செய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஆலயப் பூசைகள் மாலை 5-00 மணிக்கு நிறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ—31)

## புனிதபத்திரிசியார் வருடாந்த விழா

கொழும்புத்துறை, மார்ச்15

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி தனது பாதுகாவலராகிய புனித பத்திரிசியாரின் வருடாந்த விழாவை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7.30 மணிக்கு கல்லூரி அதிபர் வண. பிதா அ. இ. பேர்ணாட் அடிகளார் தலைமையில் கொண்டாட உள்ளது.

காலை நடைபெறும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து விருந்திலும் பழைய மாணவரும் கலந்து கொள்வர்.

இத்தினத்தில் மாணவர்களுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்குமிடையே சில விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படும்.

இந்த விழாவை ஒட்டி முதல் மூன்று தினங்களிலும் கல்லூரிச் சிற்றாலயத்தில் மாலை 5.30 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும்.

(ஐ-30)

# மெய்வல்லுநர் போட்டிகள்

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஆ. ஈஸ்வரநாதன்தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் சிறப்புவிருந்தினராக யாழ். தபால்அதிபர் க. விமலநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க-154)

★ ★ ★

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் நா. சண்முசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையாவும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையாவும் கௌரவ விருந்தினராக உணவுத் தொழில் நுட்பவியல் ஆலோசகர் கலாநிதி பொ. நவரட்ணமும் கலந்து கொள்வர். (இ-க)

★ ★ ★

நீர்வேலி சி.சி. த. க. பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்குதலைவர்க.இ. இராசசேகரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்விவலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கம், யாழ் கல்விவலய கோப்பாய்ப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், தபால் அதிபர் சி. இராசரத்தினமும், ச. புவிச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் அதிபர் க. நாகேந்திரராஜாதலைமையில் நாளை செவ்வாய்க்கிழமைபிற்பகல்2 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா கலந்து கொள்வார்.

(க- 133)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 15

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 00. மணிக்கு அதிபர் பொ. அம்பலவாணர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

[illegible]காமம் கல்வி வலய உதவி[illegible]ல்விப் பணிப்பாளர் அ. கமலநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி ச. கமலநாதன் வழங்குவார்.

(க)

★ ★ ★

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ். சோமேஸ்வர பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மல்லாகமாவட்டநீதிபதி மு. திருநாவுக்கரசுவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியமும் மேற்படி பாடசாலையின் முன்னாள் அதிபர் க. கணேசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-4)

★ ★ ★

ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சகோதரி திரேசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி வ. நிமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-16)

★ ★ ★

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சு. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி. இராசையாவும், கௌரவ விருந்தினராக துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

★ ★ ★

வலி. கிழக்கு, மார்ச் 15

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு அதிபர் திருமதி சி. விஸ்வலிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் க. சின்னத்தம்பியும், சிறப்பு விருந்தினராக யாழ். நல்லூர் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயனும் கலந்து கொள்வர்

(ஐ-180)

## சமய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் கோயிலில் இன்று பங்குனித் திங்கள் பூஜை முறைப்படி நடைபெற உள்ளது.

நீண்டகாலமாக ஒழுங்காக பூசை வழிபாடு நடைபெறாமல் இருந்து வந்த இந்த ஆலயத்தில் இன்று முதல் முறைப்படி பூஜைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

★ ★ ★

மீசாலை மேற்கு கங்காணியார் கந்தசாமி கோயிலின் இலட்சார்ச்சனை விழா கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளைமறுதினம்புதன்கிழமைவரைநடைபெறவுள்ள இந்த விழாவின் போது தினமும் காலை8 மணி முதல் 108 சங்காபிஷேகம், பூஜை, நியாசபூஜை, சண்முகார்ச்சனை, ஸ்கந்த ஹோமம் என்பன நடைபெறும். [ஐ-4]

★ ★ ★

இணுவில் அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலய மண்டல பூர்த்தி சங்காபிஷேக நிகழ்வு இன்று பகல் 9 மணிக்கு நடைபெறும்.

மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து திருவூஞ்சலும் சுவாமி வீதி வலம வருதலும் இடம் பெறும். (ஐ.30)

★ ★ ★

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் இன்று பங்குனி மாதப்பிறப்பும் முதல் பங்குனித் திங்கள் திருவிழாவும் காலை 10-30 மணிகு நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

காரைநகர் மணற்காடுமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவ நிகழ்வில் நளை செவ்வாய்க்கிழமை தேர் உற்சவம் நடைபெறும். மறுநாள் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(இ-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் டாக்டர் பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் கிறீன்கிங்ஸ் வி. க. அணியும், சென். நீக்கிலஸ் வி. க. அணியும் மோதவிருக்கின்றன.

பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெறும். (இ-3)

சுவை மிக்க
கோழிப் பிரியாணி
ஐஸ் கிறீம் வகைகளுக்கு
றிக்கோ
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி சேவை இல. 2193
(63868)

மலிவு விற்பனை
இன்றைய இளைஞர், யுவதிகள் விரும்பும்
சோடி (Sodi)
பாதணிகளுக்கு
10 வீத கழிவு
வழங்கப்படும்
கணபதி சூ பலஸ்
159, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(63861)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
பா. நிஷாந்தினி
அவர்களின் அன்புத்தம்பி
செல்வன்
**பா. சுகந்தசொரூபன்**
(யா/நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம்)

அவர்களின் பிரிவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

1ஆம் வருட மாணவர்கள்
விஞ்ஞானபீடம்.
(63884)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மண்ணில் 24 – 11 – 1949
விண்ணில் 13 – 02 – 1999

திருமதி
**விஜயலக்சுமி நாகராஜா**

மாதமொன்று கழிந்ததம்மா மாதாவே நீ மறைந்து
வேதனையின் துயர்தீர வேளையொன்று வாராதோ
தாயுந்தன் அன்பினைப்போல் தாரணியில்
வேறுண்டோ!

இன்று (15-03-1999) திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னையின் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 17, 2ஆம் குறுக்குத்தெரு,
நல்லூர்.
(சி/6788)

## இனந்தெரியாத...

(முதலாம் பக்கத் தொடர்)

ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மூன்று பிரிவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தவின் படுகொலைத் திட்டம் தொடர்பான ஒலிநாடா விரைவில் வெளியாகும் என அவர் நேற்றைய 'லக்பிம' பத்திரிகையில் எழுதிய செய்தி தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தில்நிலவி வரும் ஊழல்கள் தொடர்பாக இவர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இதற்கிடையில் இவர்தாக்கப்பட்ட சம்பவத்தை சுதந்திர தொடர்புச் சாதன இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

''ஊழல்கள், மோசடிகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவது அரசாங்கத்துக்கு விரோதமான செயல் அல்ல. இத்தகைய தகவல்களை வெளியிடும் செய்தியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது அரசாங்கத்தின் கடமை'' என்று 'சண்டே ரைம்ஸ்'' பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

(இ-3-10-க)

## பெரும் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவுடன் மூன்று மணி நேரம் பேச்சு நடத்திய பின்னர் இந்தத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டு மேற்குப் பிரதேசத்தில் மட்டும் படை நடவடிக்கையை ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம் நெடுஞ்சாலையின் மேற்குப் பக்கமாகவும் கிழக்குப் பக்கமாகவும் முன்னேறி கிளிநொச்சியை அடைவது என்றும் —

அது கைகூடாது போனால் படையினர் மன்னார் நோக்கி நகர்ந்து மன்னாரையும் யாழ். குடாநாட்டையும் இணைக்க நடவடிக்கை எடுப்பது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் மன்னாருக்கு மேற்குப் பக்கமாகப் பெரிய ஒரு தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகவும் —

இதற்காகப் புலிகள் கிழக்கில் இருந்து படை அணிகளை கொண்டு வருவதாகவும் இராணுவ உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-3-10)

## சிறு சிறு...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்கள் நேற்று மேற்கொண்ட நடவடிக்கையில் 100 மிதிவெடிகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மாங்குளத்துக்கு வடமேற்கே விடுதலைப் புலிகளுக்கும், துருப்பினருக்குமிடையில் மோதல் ஒன்று இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. (இ-3)

## 1996க்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தக் காலப் பகுதியில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே விசாரணை நடத்தப்படும் என்றும்— ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

காணாமற் போனோரின் விவரங்களை படிவம் ஒன்றில் பெற்றுக் கொண்ட ஆணைக்குழுவினர் ஜனாதிபதியின் கவனத்துக்கு அதனைக் கொண்டுவருவதாக உறுதி தெரிவித்தனர்.

(இ-3-6-15)

# சந்தைக் கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட பண்டத்தரிப்புச் சந்தைக்கான கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி. கே. ஜெகன். ஐ. கிறிஸ்ரி பிரேம்குமார். ஐ. நா. அபிவிருத்தித் திட்ட யாழ். வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொள்வர்.

## கல்வியங்காடு...

(முதலாம் பக்கத் தொடர்)

யினர் முறியடித்தனர் என்றும்—

அங்கு இருந்த ஒருவர் குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தார் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்கல் செய்தார்.

சந்தேகநபரான இரட்ணசிங்கம் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தமது அடிப்படை உரிமையினை மீறும் செயல் எனத் தெரிவித்துத் தமது சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராசா மூலம் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீது விசாரணை மேற்கொண்ட நீதிவான் இவருக்கு எதிராக இன்றைய தினத்துக்கு முன் வழக்குத் தாக்கல் செய்யும்படியும் —

அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யத் தவறுமிடத்து இவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் — தெரிவித்திருந்தார். (இ-3-10)

# ஆசிய ரெஸ்ட் கிரிக்கெட்

டாக்காவில் நடைபெறும் ஆசிய ரெஸ்ட் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நேற்று ஆட்டம் முடிவில் இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து ஒன்பது ஓட்டங்களைப் பெற்றது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 594 ஓட்டங்களைப் பெற்றது.

அதைத் தொடர்ந்து ஆடிய இலங்கை மூன்று விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்தது.

பாகிஸ்தான் அணியின் கப்டன் வாசீம் அக்ரம் அடுத்தடுத்து மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி 'ஹாட்ரிக்' சாதனை நிகழ்த்தினார்.

முன்னர் ஓர் ஆட்டத்திலும் அவர் 'ஹாட்ரிக்' சாதனை நிலைநாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## கப்பலில் பொருள்கள்

பருத்தித்துறையில் 'ஓஷன் சக்ஸஸ்' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி பூர்த்தி அடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் ஏற்றும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில தினங்களுக்குப் பொருள்கள் ஏற்றும் பணி தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## காயம்

இருவருக்கிடையில் அடிபிடியை விலக்கி வைக்கச் சென்றவர் இரும்புக் கம்பி அடிக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

குருநகர், கடற்கரை வீதிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நாகரட்ணம் யோசப் (வயது 50) என்பவரே காயமடைந்தவராவர். (இ-15)

## பொலித்தீன்பை...

(முதலாம் பக்கத் தொடர்)

கை செய்தியாளர் சிறிலால் பிரியந்த மேற்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமக்கு நடந்த அனர்த்தம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3. 30 மணி இருக்கும், நாங்கள் சி. ஐ. டி. பொலீஸார் எனக் கூறி என்னை சிலர் நித்திரையால் எழுப்பினர்.

அண்மையில் நான் எழுதிய கட்டுரை ஒன்றில் என்னிடம் உள்ள ஒலிப்பதிவு நாடாவில்பல இரகசியங்கள் அடங்கியுள்ளன எனக் குறிப்பிட்டிருந்தேன். அந்த ஒலிப்பதிவு நாடாவைத் தருமாறு அவர்கள் கேட்டனர். வீட்டில் இருந்த மின் விளக்குகள் அனைத்தையும் அணைக்குமாறு அவர்கள் கூறினர்.

ஒலிப்பதிவு நாடாவைத் தரும்படியும் தாங்கள் கூறும் இடத்துக்குச் சென்றுமன்னிப்புக் கேட்கும் படியும் கூறி அவர்கள் என்னைத் தாக்கினர்.

அப்போது அங்கு வந்தவர்களுக்கு 'செல்டெல்' தொலைபேசியில் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது ''சேர்! நாங்கள் ஆளைக் கூட்டிக்கொண்டு வருகிறோம்'' என பதில் அளிக்கப்பட்டது. அப்போது வந்தவர்களில் மற்றொருவர் யாரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது எனக் கேட்டபோது அது அமைச்சரிடமிருந்து என பதில் அளிக்கப்பட்டது.

அவர்கள் என்னைத் தூக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். எனது கைகால்கள் கட்டப்பட்டன. ஒரு பெரிய பொலீத்தீன் பையில் என்னைப் போட்டுக் கட்டி காடுபோன்ற இடத்தில் தூக்கி வீசினர்.

வந்தவர்கள் அனைவரிடமும் ரீ. 56 ரகதுப்பாக்கிகளும் பிஸ்ரல்களும் இருந்தன. கடத்திச் சென்ற குழுவில் அதிகமானோர் ஆங்கிலத்திலும் தமிழிலும் மாத்திரமே உரையாடினர். சிங்களத்தில் ஓரிருவர் மாத்திரமே உரையாடினர்.

இவ்வாறு சிறிலால் பிரியந்த தெரிவித்தார்.

(இ-10

## புலிகள்..,

(முதலாம் பக்கத் தொடர்)

தப்பட்டது.

கல்விக் கல்லூரி நிர்வாகம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டது.

இதன் பிரகாரம் நேற்று மாலை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் வைத்து பிரஸ்தாப வாகனம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

தற்போது இந்த வாகனம் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. (இ—21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15- 03 -1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org